# National Diploma In English

## ජාතික ඉංග්‍රීසි ඩිප්ලෝමා පාඨමාලාව

## தேசிய ஆங்கில டிப்ளோமா

# 6

**Psalm Institute of Engineering and Technology**
A Division of Psalms Technologies (Pvt) Ltd,
22-1/4, Galle Road, Dehiwala.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# National Diploma in English
# தேசிய ஆங்கில டிப்ளோமா பயிற்சிநெறி

24 புத்தகங்களை கொண்ட தேசிய ஆங்கில டிப்ளோமா பாடநெறியில் இது 6வது புத்தகம்.

## ஆங்கிலத்தை கற்றுக்கொள்ளுவது இலகுவானதா?

எந்த மொழியுமே கற்பதற்கு இலகுவானதே. தவறான முறையில் ஆங்கிலத்தை கற்பதாலும் கற்பிக்கப்படுவதாலுமே பலர் ஆங்கிலத்தை கற்பதை வெறுக்கின்றனர் ஆங்கிலத்தை கற்க சிரமப்படுகின்றனர். 4ம் வகுப்பில் தமிழின் அடிப்படை இலக்கணமான எழுவாய் பயனிலையை கற்கின்ற நாம் நான்கு வயதில் தமிழை சரளமாக கதைக்க எந்த இலக்கணத்தையும் கற்றுக்கொள்வதில்லை. அதேபோலவே நான்கு வயதில் ஆங்கிலத்தை சரளமாக கதைக்கும் ஆங்கில குழந்தைகளும் ஆங்கிலத்தை கதைப்பதற்காக எந்த இலக்கணத்தையும் கற்றுக்கொள்வதில்லை. அவ்வாறிருக்கும்போது ஆங்கிலத்தை கற்க நினைக்கும் நாம் முதலில் அதன் இலக்கணத்தை கற்க நினைப்பது ஏன்?

## உரைநடை மூலமான பயிற்சி

உரைநடை மூலமான பயிற்சி மூலமே குழந்தைகள் தாய்மொழியை கற்றுக்கொள்கின்றன. ஒரு மொழியை கற்றுக்கொள்வதற்கு உள்வாங்கல், வெளிக்கொணர்தல் என்ற இரண்டு விடயங்கள் அவசியமானதாகும். குழந்தைகள் குடும்பத்தில் உள்ள பலரும் கதைக்கும் வசனங்களை உள்வாங்குகின்றன. அதேபோல் தாங்களும் பல்வேறு வசனங்களை உருவாக்கி வெளிக்கொணர்கின்றன. இந்த இரண்டு படிமுறைகள் மூலமே அவை தாய்மொழியை கற்றுக்கொள்கின்றன.

## குழந்தைகளைப்போல

குழந்தைகள் தாய்மொழியை கற்பதை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்ட இந்த பாடநெறி உள்வாங்கல், வெளிக்கொணர்தல் என்ற இரண்டு படிமுறைகளோடு ஆங்கில வசன அமைப்புகளையும் ஆழமாக கற்றுக்கொடுப்பதால் மிக வேகமாக ஆங்கிலத்தில் பாண்டித்தியம் அடைய வழிவகுக்கிறது.

## பயிற்சிகள் இல்லாமல்

பயிற்சிகள் எதனையும் செய்யாமல் இந்த பாடநெறியை வெறுமனே படிப்பதால் மட்டும் ஆங்கிலம் கதைக்க முடியாது. இந்தப்பாட நெறியில் உள்வாங்கலை அடிப்படையாக கொண்டு ஏராளமான வசனங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அதே போன்று வெளிக்கொணர்தலை அடிப்படையாக கொண்டு ஏராளமான பயிற்சிகளும் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பாடநெறியை கற்று வெறும் உள்வாங்கல் மூலம் ஆங்கிலத்தை கற்றுவிடலாம் என்று நினைத்தால் அது தவறு. ஒவ்வொரு பயிற்சிகளும் செய்யப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய மனிதர்

ஆங்கில இலக்கணம் நன்கு தெரியும். அதோடு பெரிய வேலையில் இருப்பதால் பயிற்சிகளை செய்ய நேரம் கிடைப்பதில்லை. கதைப்பதில்தான் கொஞ்சம் பிரச்சினை உள்ளது. இப்பாட நெறியை படிப்பதால் நன்கு கதைக்கலாமா? இது சிலருடைய கேள்வி.

பாடங்களோடு பயிற்சிகளையும் செய்வதாலேயே நன்கு கதைக்க முடியும். வெறுமனே பாடநெறியை படிப்பதால் கதைக்க முடியாது. வெளிக்கொணர்தலை அடிப்படையாக கொண்ட ஏதாவதொரு பயிற்சி எந்த ஒரு மொழியை கற்பதற்கும் அவசியமாகும். படித்த பாடங்களை அடிப்படையாக கொண்டு வசனங்களை உருவாக்கி மற்றவர்களுடன் ஆங்கிலத்தில் கதைப்பதற்கான சந்தர்ப்பம் உங்களுக்கு மிக குறைவு. அவ்வாறு சந்தர்ப்பம் கிடைத்தாலும் எங்கே தவறாக சொல்லி விடுவேனோ என்ற பயம் எல்லோருக்கும் இருப்பது வழக்கமே. இந்த நிலையிலேயே இப்பாடத்திட்டத்தில் வெளிக்கொணர்தலை அடிப்படையாக கொண்ட பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. பயிற்சிகளை செய்வதன் மூலம் பலரோடு உரையாடுவதில் கிடைக்கின்ற அனுபவம் உங்களுக்கு கிடைக்கும். 24 புத்தகத்திலுமுள்ள பயிற்சிகளை செய்து முடிப்பவர்கள் முதல்முறையாக ஆங்கிலம் கதைக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் கூட மிக திருத்தமாக ஆங்கிலத்தை கதைக்க முடியும். நேரமில்லை என்று நினைப்பது முட்டாள்த்தனம். நாம் தான் நேரத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும். இப்பாடநெறியில் மிகப்பெரிய வேலைகளில் உள்ளவர்களும் சேர்ந்து படிக்கிறார்கள்.

## தவறாக பயிற்சிகளை செய்தால்

பயிற்சிகளை சரியாக செய்யமுடியுமாயின் நீங்கள் இந்தப்பாடநெறியில் சேர வேண்டிய அவசியம் இருந்திருக்காது. இப்பாட நெறியின் பிரகாரம் சரி தவறு அடிப்படையில் பயிற்சிகளுக்கு புள்ளிகள் வழங்கப்படுவதில்லை. மாறாக பயிற்சிகள் செய்யப்பட்டுள்ளனவா இல்லையா என்ற அடிப்படையிலேயே புள்ளிகள் வழங்கப்படுகிறது. மழலை மொழிபேசும் குழந்தைகள் விடும் தவறுகளை நாம் திருத்துவதில்லை. தாமே தம் தவறுகளை தெரிந்து திருத்திக்கொள்கின்றன. இப்பயிற்சிகளில் நீங்கள் விடும் தவறுகளை அடுத்த அடுத்த பாடங்களில் நீங்களே அறிந்து திருந்தும் வகையிலேயே பாடங்களும் பயிற்சிகளும் அமைக்கப்பட்டுள்ளன. உங்களால் செய்யவே முடியாது என்று நீங்கள் கருதும் பயிற்சிகளை விட்டுவிட்டு மற்ற பயிற்சிகளை செய்யுங்கள். சில நாட்களின் பின்னர் நீங்கள் விட்டுச்சென்ற பயிற்சிகளை நீங்கள் செய்ய இயலுமாயிருக்கும்.

## கற்றுக்கொடுக்க ஒருவர் இருந்தால்

யாருடைய உதவியுமின்றி நீங்களாக கற்றுக்கொள்ளும் வகையிலேயே இப்பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பாடங்களுக்காகவோ அல்லது பயிற்சிகளுக்காகவோ யாருடைய உதவியையும் நாடாதீர்கள். உங்களுக்கு தெரிந்த வகையில் செய்யுங்கள். உங்களால் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கிலமும் நீங்களும்

கடந்த 5 புத்தகங்களிலும் நாம் வெறும் ஆங்கில அடிப்படை வசன அமைப்புகளையே பார்த்தோம். ஆனாலும் அவற்றின் மூலம் ஆங்கிலம் கதைக்கும்போது பயன்படுகின்றதான, அரைவாசிக்கும் அதிகமான வசனங்களை நீங்கள் உருவாக்க கற்றிருப்பீர்கள். அடுத்த 6 புத்தகங்களிலும் மிகவும் இலகுவான ஆனாலும் மிக பயனுள்ள பல வசன உட்கட்டமைப்புகளை பார்க்க உள்ளோம். அதற்கு முன்பாக நாம் இதுவரை பார்த்த வசன அடிப்படை அமைப்புகளை மீள் படிப்பு செய்வோம். இதுவரை கற்றுக்கொண்ட பாடங்கள் பல புரியாதிருந்தாலும் பல பயிற்சிகள் செய்ய முடியாமல் இருந்திருந்தாலும் இந்த புத்தகத்தின் மூலம் அவற்றையும் உங்களால் இலகுவில் புரிந்து கொள்ள முடியும் பயிற்சிகளையும் நீங்கள் இலகுவில் செய்ய முடியும். தொடர்ந்து படியுங்கள்

### சில அடிப்படை சொற்கள்

| | | |
|---|---|---|
| I | – | நான் |
| He | – | அவன் |
| She | – | அவள் |
| They | – | அவர்கள் |
| We | – | நாங்கள் |
| You | – | நீங்கள் |

## சில அடிப்படை வசனங்கள்

இவை நிறைவான வசனங்களா என்பதில் உங்களுக்கு சந்தேகம் இருக்கவேண்டாம் கீழே உள்ள ஒவ்வொன்றும் அர்த்தமுள்ள முழு வசனங்களே.

| | | | |
|---|---|---|---|
| I am | - நான் இருக்கிறேன் | They are | - அவர்கள் இருக்கிறார்கள் |
| I was | - நான் இருந்தேன் | They were | - அவர்கள் இருந்தார்கள் |
| I will be | - நான் இருப்பேன் | They will be | - அவர்கள் இருப்பார்கள் |
| He is | - அவன் இருக்கிறான் | We are | - நாங்கள் இருக்கிறோம் |
| He was | - அவன் இருந்தான் | We were | - நாங்கள் இருந்தோம் |
| He will be | - அவன் இருப்பான் | We will be | - நாங்கள் இருப்போம் |
| She is | - அவள் இருக்கிறாள் | You are | - நீங்கள் இருக்கிறீர்கள் |
| She was | - அவள் இருந்தாள் | You were | - நீங்கள் இருந்தீர்கள் |
| She will be | - அவள் இருப்பாள் | You will be | - நீங்கள் இருப்பீர்கள் |

மேலே am என்பது இருக்கிறேன் என்றும் is என்பது இருக்கிறான், இருக்கிறாள், அல்லது இருக்கிறது என்றும் are என்றால் இருக்கிறோம், இருக்கிறீர்கள், அல்லது இருக்கிறார்கள் என்றும் அர்த்தம் பெறும்.

அதேபோல் was என்றால் இருந்தேன், இருந்தான், இருந்தாள் அல்லது இருந்தது என்றும் were என்றால் இருந்தோம், இருந்தீர்கள், அல்லது இருந்தார்கள் என்றும் அர்த்தம் பெறும். will be என்றால் இருப்பேன், இருப்பான், இருப்பாள், இருக்கும், இருப்பார்கள், இருப்போம், அல்லது இருப்பீர்கள் என்று அர்த்தம் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கில வசன அமைப்பு

தமிழ் மற்றும் ஆங்கில வசன அமைப்புகள் வேறுபட்டவை. தமிழிலும் ஆங்கிலத்திலும் வசனங்கள் ஒரேவிதமாக சொல்லப்படுவதில்லை. தமிழில் சொல்கின்ற ஒரு வசனத்தை நேரடியாக ஆங்கிலத்திற்கு மாற்றாமல் அது ஆங்கிலத்தில் எவ்வாறு சொல்லப்படுகிறது என்று அறிந்து அதற்கேற்ப சொல்ல வேண்டும்.

தமிழ் : நான் போய்க்கொண்டு இருக்கிறேன்
ஆங்கிலம் : நான் இருக்கிறேன் போய்க்கொண்டு

தமிழ் : நான் போய் இருந்தேன்
ஆங்கிலம் : நான் இருந்தேன் போய்

தமிழ் : நான் பாடசாலைக்கு போய்க்கொண்டு இருக்கிறேன்
ஆங்கிலம் : நான் இருக்கிறேன் போய்க்கொண்டு பாடசாலைக்கு

தமிழ் : நான் நேற்று யாழ்ப்பாணத்திற்கு போய் இருந்தேன்
ஆங்கிலம் : நான் இருந்தேன் போய் யாழ்ப்பாணத்திற்கு நேற்று

தமிழ் : நான் இன்று விருந்துக்கு போக கூடும்
ஆங்கிலம் : நான் கூடும் போக விருந்துக்கு இன்று

## ஆங்கில வினை வடிவம்

ஆங்கில வினைச்சொற்களிற்கான தமிழ் மாற்றீடுகள் சரியாக தெரிந்திருந்தால் மட்டுமே நாம் தமிழில் சிந்திக்கும் வசனங்களை சரியாக ஆங்கிலத்தில் சொல்ல முடியும். பொதுவாக வினைச்சொற்களின் தமிழ் மாற்றீடுகளினை பலர் சரியாக தெரிந்திருப்பதில்லை. **Going** என்றால் போய்க்கொண்டு இருக்கிற என்றும் **Gone** என்றால் போய்முடிந்த என்றும் சொல்பவர்கள் பலர். இவை மிக தவறாகும். **Going** என்றால் நிகழ்காலம் என்றோ அல்லது **Gone** என்றால் முடிந்த காலமென்றோ நினைப்பதும் தவறு. **Going** என்றால் போய்க்கொண்டு. அதேபோல் **Eating** என்றால் சாப்பிட்டுக்கொண்டு, **Taking** என்றால் எடுத்துக்கொண்டு மற்றும் **Playing** என்றால் விளையாடிக்கொண்டு. அதேபோல **Gone** என்றால் போய், **Eaten** என்றால் சாப்பிட்டு, **Taken** என்றால் எடுத்து, **Played** என்றால் விளையாடி என்பதே சரியாகும்.

Go என்றால் போ அல்லது போக என்று அர்த்தம் பெறும். Eat என்றால் சாப்பிடு அல்லது சாப்பிட என்றும் Take என்றால் எடு அல்லது எடுக்க என்றும் Play என்றால் விளையாடு அல்லது விளையாட என்றும் அர்த்தம் பெறும்.

### பயிற்சி 1

கீழே உள்ள ஆங்கில வினை வடிவங்களின் தமிழ் மாற்றீட்டினை எழுதுக

| | | |
|---|---|---|
| 1. Write | 2. Walked | 3. Working |
| 4. Singing | 5. buying | 6. Slept |
| 7. Seen | 8. Speak | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில துணைவினைச்சொற்களும் அர்த்தங்களும்

ஆங்கிலத்தில் வினைச்சொற்கள் காலத்தை காட்டாது. வசனங்களிலே வினைச்சொற்கள் காலத்தை காட்டி வருவதற்காக துணை வினைச்சொற்கள் பயன்படுத்தப்படுகிறது.

## போய்க்கொண்டு (Going) விளையாடிக்கொண்டு (Playing)

போய்க்கொண்டு (Going), விளையாடிக்கொண்டு (Playing) போன்ற வினைவடிவங்கள் வசனங்களில் வரும்போது அவற்றை காலத்தோடு முடிக்க கீழே உள்ள உதவி வினைச்சொற்களே பயன்படும்.

| | | |
|---|---|---|
| am | : | இருக்கிறேன். |
| is | : | இருக்கிறான், இருக்கிறாள், இருக்கிறது |
| are | : | இருக்கிறோம், இருக்கிறீர்கள், இருக்கிறார்கள் |
| was | : | இருந்தேன், இருந்தான், இருந்தாள், இருந்தது. (ஒருமை) |
| were | : | இருந்தோம், இருந்தீர்கள், இருந்தார்கள் (பன்மை) |
| will be | : | இருப்பேன், இருப்பான், இருப்பாள், இருக்கும், இருப்போம், இருப்பீர்கள், இருப்பார்கள். (எல்லா எதிர்காலம்) |

இவை போய்க்கொண்டு இருக்கிறேன், போய்க்கொண்டு இருக்கிறான் போன்று நிகழ்காலத்திலும், போய்க்கொண்டு இருந்தாள், போய்க்கொண்டு இருந்தார்கள் போன்று இறந்தகாலத்திலும் போய்க்கொண்டு இருப்பேன், போய்க்கொண்டு இருப்பார்கள் போன்று எதிர்காலத்திலும் அர்த்தம் தரும்படி பயன்படுத்தலாம்.

1. அவன் போய்க்கொண்டு இருந்தான் என்பது
   அவன் இருந்தான் போய்க்கொண்டு என்று வரும். அதாவது
   He was going
2. அவர்கள் சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்பது
   அவர்கள் இருக்கிறார்கள் சாப்பிட்டுக்கொண்டு என்று வரும். அதாவது
   They are eating
3. நாங்கள் விளையாடிக்கொண்டு இருப்போம் என்பது
   நாங்கள் இருப்போம் விளையாடிக்கொண்டு என்று வரும். அதாவது
   We will be playing

## போய் (gone), சாப்பிட்டு (eaten), எடுத்து (taken)

முடியாத வினைச்சொற்களாகிய போய்(gone), சாப்பிட்டு(eaten), எடுத்து(taken) போன்ற வினைச்சொற்களை வசனங்களிலே காலத்தோடு முடிக்க Has, Have, Had, Will have உள்ள உதவி வினைச்சொற்கள் பயன்படும்.

| | | |
|---|---|---|
| has | : | இருக்கிறான், இருக்கிறாள், இருக்கிறது |
| have | : | இருக்கிறேன், இருக்கிறோம், இருக்கிறீர்கள், இருக்கிறார்கள் |
| had | : | இருந்தேன், இருந்தான், இருந்தாள், இருந்தது, இருந்தோம், இருந்தீர்கள், இருந்தார்கள் (எல்லா இறந்த காலம்) |
| will have | : | இருப்பேன், இருப்பான், இருப்பாள், இருக்கும், இருப்போம், இருப்பீர்கள், இருப்பார்கள். (எல்லா எதிர்காலம்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்துகின்ற உதவி வினைவடிவங்களை பொறுத்தே வினைச்சொற்கள் காலத்தையும் காட்டும். உதாரணமாக போய் இருக்கிறேன், போய் இருக்கிறான் போன்று நிகழ்காலத்திலும், போய் இருந்தாள், போய் இருந்தார்கள் போன்று இறந்தகாலத்திலும் போய் இருப்பேன், போய் இருப்பார்கள் போன்று எதிர்காலத்திலும் அர்த்தம் தரும்.

1. அவர்கள் சாப்பிட்டு இருக்கிறார்கள் என்பது
   அவர்கள் இருக்கிறார்கள் சாப்பிட்டு என்று வரும். அதாவது
   They have eaten
2. அவன் போய் இருந்தான் என்பது
   அவன் இருந்தான் போய் என்று வரும். அதாவது
   He had gone
3. நாங்கள் விளையாடி இருப்போம் என்பது
   நாங்கள் இருப்போம் விளையாடி என்று வரும். அதாவது
   We will have played

குறிப்பு: Have, Has, Had, Having என்பதாக 'வைத்திருத்தல்' என்று அர்த்தம் பெறும் Have என்ற வினைச்சொல்லில் பல்வேறு வடிவங்களும் உண்டு. மேலே உள்ள Have, Has, Had என்பன அந்த வினைச்சொல்லின் வடிவங்கள் இல்லை. மேலே உள்ளவை அதே எழுத்தில் உள்ள உதவி வினைச்சொற்கள். இவை காலத்தை காட்ட மட்டும் பயன்படும். எனவே வைத்திருத்தல் என்ற அர்த்தம் இவற்றிற்கு கிடையாது.

## Go - போ போக, Eat - சாப்பிடு சாப்பிட, Take - எடு எடுக்க

Go, Eat, Take போன்று சாதாரண வினை வடிவங்களுக்கு இரண்டு அரத்தங்கள் உண்டு. இதில் போ, சாப்பிடு, எடு போன்ற அர்த்தங்கள் Do, Does, Did, Will போன்ற காலங்களை மட்டும் காட்டும் துணைவினைகளோடு சேர்ந்து வசனங்களில் பயன்படும்.

| | | |
|---|---|---|
| does | : | கிறான், கிறாள், கிறது |
| do | : | கிறேன், கிறோம், கிறீர்கள், கிறார்கள் |
| did | : | தேன், தான், தாள், தது, தோம், தீர்கள், தார்கள் |
| will | : | வேன், வான், வாள், உம், வோம், வீர்கள், வார்கள். |

1. அவர்கள் சாப்பிடுகிறார்கள்
   They do eat => They eat
2. அவன் போனான் என்பது
   He did go => He went
3. நாங்கள் விளையாடுவோம் என்பது
   We will play => We will Play

குறிப்பு: ஆங்கிலத்தில் do + eat இனை eat என்றும் does + eat இனை eats என்றும் did + go இனை went என்றும் சேர்த்து எழுதுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Go - போ, போக, Eat - சாப்பிடு, சாப்பிட, Take - எடு, எடுக்க

போக, சாப்பிட, எடுக்க போன்ற அர்த்தங்கள் Can, May, Might, Should, Must போன்ற அர்த்தம் உள்ள துணைவினைகளோடு சேர்ந்து வசனங்களில் பயன்படும்.

| | | | |
|---|---|---|---|
| Can | : முடியும் | Used to | : வழக்கம் |
| May | : லாம் | Has/have to | : வேண்டியிருக்கிறது |
| Might | : கூடும் | Had to | : வேண்டியிருந்தது |
| Should | : வேண்டும் | will have to | : வேண்டியிருக்கும் |
| Could | : முடிந்தது | Am/is/are able to | : இயலுமாயிருக்கிறது |
| Must | : வேண்டும் | Was/were able to | : இயலுமாயிருந்தது |
| Need not | : வேண்டியதில்லை | Will be able to | : இயலுமாயிருக்கும் |

1. அவர்கள் சாப்பிட முடியும் என்பது
   அவர்கள் முடியும் சாப்பிட என்று வரும். அதாவது
   They can eat

2. அவன் போக லாம் என்பது
   அவன் லாம் போக என்று வரும். அதாவது
   He may go

3. நாங்கள் விளையாட கூடும் என்பது
   நாங்கள் கூடும் விளையாட என்று வரும். அதாவது.
   We might play

4. அவர்கள் சாப்பிட வேண்டும் என்பது
   அவர்கள் வேண்டும் சாப்பிட என்று வரும். அதாவது.
   They must eat

5. அவன் போக வேண்டியதில்லை என்பது
   அவன் வேண்டியதில்லை போக என்று வரும். அதாவது.
   He need not go

6. நாங்கள் விளையாட வேண்டியிருக்கிறது என்பது
   நாங்கள் வேண்டியிருக்கிறது விளையாட என்று வரும். அதாவது.
   We have to play

7. அவர்கள் சாப்பிட வேண்டியிருந்தது என்பது
   அவர்கள் வேண்டியிருந்தது சாப்பிட என்று வரும். அதாவது.
   They had to eat

8. அவன் போக இயலுமாயிருக்கிறது என்பது
   அவன் இயலுமாயிருக்கிறது போக என்று வரும். அதாவது
   He is able to go

9. நாங்கள் விளையாட இயலுமாயிருக்கும் என்பது.
   நாங்கள் இயலுமாயிருக்கும் விளையாட என்று வரும். அதாவது.
   We will be able to play



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## May be, May have - இருக்கலாம்

May be, Can be, Might be போன்றவைGoing (போய்க்கொண்டு), Eating (சாப்பிட்டுக்கொண்டு) போன்ற கொண்டு என்றுமுடியும் வினைவடிவங்களோடு வரும்.

1. அவர்கள் சாப்பிடுக்கொண்டு இருக்க லாம்
   They may be eating
2. அவன் போய்க்கொண்டு இருக்க வேண்டும்
   He should be going
3. நாங்கள் விளையாடிக்கொண்டு இரு ப்போம்
   We will be play

May have, Can have, Might have போன்றவை Gone (போய்), Eaten (சாப்பிட்டு) போன்ற முற்றுப்பெறாத வினைவடிவங்களோடு வரும்.

1. அவர்கள் சாப்பிட்டு இருக்க கூடும்
   They might have eaten
2. அவன் போய் இருப் பான்
   He will have gone
3. நாங்கள் விளையாடி இருக்க முடியும்
   We can have played

## ஆங்கில எதிர்மறை மற்றும் வினா அமைப்புகள்

| | |
|---|---|
| 1. I was going | : நான் போய்க்கொண்டு இருந்தேன் |
| Was I going | : நான் போய்க்கொண்டு இருந்தேனா? |
| 2. He has gone | : அவன் போய் இருக்கிறான் |
| He has not gone | : அவன் போய் இருக்கவில்லை |
| 3. They can go | : அவர்கள் போக முடியும் |
| Can they go? | : அவர்கள் போக முடியுமா? |
| 4. We may go | : நாங்கள் போக லாம் |
| Where may we go? | : நாங்கள் எங்கே போகலாம்? |
| 5. She should go | : அவள் போக வேண்டும் |
| Why should she go? | : அவள் ஏன் போக வேண்டும்? |
| 6. I have to go | : நான் போக வேண்டியிருக்கிறது |
| How do I have to go? | : நான் எப்படி போக வேண்டியிருக்கிறது? |
| 7. He was able to go | : அவன் போக இயலுமாயிருந்தது |
| When was he able to go? | : அவன் எப்போது போக இயலுமாயிருந்தது? |
| 8. He will go | : அவன் போவான் |
| Who will go? | : யார் போவார்? |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1 முதல் 5ஆம் புத்தகம் வரை சில பயிற்சிகளின் விளக்கங்கள்

1. நீங்கள் எப்போது போவீர்கள்?
இதன் அடிப்படை வசனம் - நீங்கள் போவீர்கள் - You will go.
கேள்வி வசனம் - நீங்கள் போவீர்களா? - Will you go?
எனவே, நீங்கள் எப்போது போவீர்கள்? - When will you go?

2. அவள் போக கூடாது
இங்கு கூடாது என்பது கூடும் என்பதன் எதிர்மறை இல்லை. வேண்டும் என்பதன் எதிர்மறையே கூடாது ஆகும். அதாவது போக வேண்டும், போக கூடாது.
அடிப்படை வசனம் - அவள் போக வேண்டும் - She must go.
எனவே, அவள் போக கூடாது - She must not go?

3. அவன் ஏன் போக வேண்டும்?
இதன் அடிப்படை வசனம் - அவன் போக வேண்டும் - He must go.
கேள்வி வசனம் - அவன் போக வேண்டுமா? - Must he go?
எனவே, அவன் ஏன் போக வேண்டும்? - Why must he go?

4. நாங்கள் எங்கே போக கூடும்?
அடிப்படை வசனம் - நாங்கள் போக கூடும் - We might go.
கேள்வி வசனம் - நாங்கள் போக கூடுமா? - Might we go?
எனவே, நாங்கள் எங்கே போக கூடும்? - Where might we go?

5. அவன் ஏன் போக முடியாது?
அடிப்படை வசனம் - அவன் போக முடியும் - He can go.
கேள்வி வசனம் - அவன் போக முடியுமா? - Can he go?
கேள்வி எதிர்மறை வசனம் - அவன் போக முடியாதா? - Can't he go?
எனவே, அவன் ஏன் போக முடியாது? - Why can't he go?

6. அவர்கள்போய் இருக்க மாட்டார்கள்
போய் இருப்பார்கள் என்பதன் எதிர்மறையே போய் இருக்க மாட்டார்கள்
அடிப்படை வசனம் - அவர்கள் போய் இருப்பார்கள் - They will have gone.
எனவே, அவர்கள் போய் இருக்க மாட்டார்கள் - They will not have gone

7. நீங்கள் போக வேண்டி இருக்காது
போக வேண்டி இருக்கும் என்பதன் எதிர்மறையே போக வேண்டி இருக்காது.
அடிப்படைவசனம் - நீங்கள் போக வேண்டி இருக்கும் - You will have to come.
எனவே, நீங்கள் போக வேண்டி இருக்காது - You will not have to come.

8. நீங்கள் எங்கே போய் இருந்தீர்கள்?
அடிப்படை வசனம் - நீங்கள் போய் இருந்தீர்கள் - You had gone.
கேள்வி வசனம் - நீங்கள் போய் இருந்தீர்களா? - Had you gone?
எனவே, நீங்கள் எங்கே போய் இருந்தீர்கள்? - Where had you gone?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. அவன் எப்போது விளையாட வேண்டி இருந்தது
அடிப்படை வசனம் - அவன் விளையாட வேண்டி இருந்தது - He had to play.
இங்கு had to என்பது did have to என்பதாகும். எனவே
அவன் விளையாட வேண்டி இருந்ததா ? - Did he have to play ?
எனவே, அவன் எப்போது விளையாட வேண்டி இருந்தது ? - When did he have to play ?

9. நாங்கள் எப்படி நித்திரைசெய்ய முடியும் ?
இதன் அடிப்படை வசனம் - நாங்கள் நித்திரைசெய்ய முடியும - We can sleep.
கேள்வி வசனம் - நாங்கள் நித்திரைசெய்ய முடியுமா ? - Can we sleep ?
எனவே, நாங்கள் எப்படி நித்திரைசேய்ய முடியும் ? - How can we sleep ?

10. அவன் எப்படி வாசிக்க வேண்டி இருக்கிறது ?
இதன் அடிப்படை வசனம் - அவன் வாசிக்க வேண்டி இருக்கிறது - He has to read.
இங்கு has to என்பது does have to என்பதாகும். எனவே
கேள்வி வசனம் - அவன் வாசிக்க வேண்டி இருக்கிறதா ? - Does he have to go ?
எனவே, அவன் எப்படி வாசிக்க வேண்டி இருக்கிறது ? - How does he have to go ?

11. அவர்கள் எப்படி எழுதினார்கள் ?
அடிப்படை வசனம் - அவர்கள் எழுதினார்கள் - They did write. (They wrote)
They did write என்பது They wrote என்று நேர்வசனங்களில் சொல்லப்படும்.
கேள்வி வசனம் - அவர்கள் எழுதினார்களா ? - Did they write ?
எனவே, அவர்கள் எப்படி எழுதினார்கள் ? - How did they write ?

12. அவன் எங்கே போய்க்கொண்டு இருக்கிறன் ?
அடிப்படை வசனம் - அவன் போய்க்கொண்டு இருக்கிறான - He is going.
*கேள்வி வசனம்* - அவன் போய்க்கொண்டு இருக்கிறானா ? - Is he going ?
எனவே, அவன் எங்கே போய்க்கொண்டு இருக்கிறான் ? - Where is he going ?

13. நான் ஏன் வேலை செய்ய வேண்டும் ?
இங்கு வேலை செய்ய என்பதற்கு work என்பதே சரியான ஆங்கில பதமாகும்.
இதற்கு Do work என்று பாவிப்பது தவறாகும்.
*அடிப்படை வசனம்* - நான் வேலை செய்ய வேண்டும் - I should work.
கேள்வி வசனம் - நான் வேலை செய்ய வேண்டுமா ? - Should I work ?
எனவே, நான் ஏன் வேலை செய்ய வேண்டும் ? - Why should I work ?

14. அவன் வாசிக்காமல் இருக்க கூடும்.
இங்கு வாசிக்க கூடும் என்பதன் எதிர்மறையே வாசிக்காமல் இருக்க கூடும்.
அடிப்படை வசனம் - அவன் வாசிக்க கூடும் - He might read.
எதிர்மறை வசனம் - அவன் வாசிக்காமல் இருக்க கூடும் - He might not read.

15. அவன் வாசிக்க இயலுமாய் இருக்குமா ?
வசனம் - அவன் வாசிக்க இயலுமாய் இருக்கும் - He will be able to read.
கேள்வி - அவன் வாசிக்க இயலுமாய் இருக்குமா ? - Will he be able to read ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1 முதல் 5ஆம் புத்தகம் வரை சில பயிற்சிகளின் விளக்கங்கள்

1. They helped me - அவர்கள் எனக்கு உதவினார்கள்
இங்கு helped = did + help எனவே இதனை They did help me என்றும் எழுதலாம்
எனவே கேள்வி வசனம் Did they help me - அவர்கள் எனக்கு உதவினார்களா?
எதிர்மறை வசனம் They did not help me - அவர்கள் எனக்கு உதவிசெய்யவில்லை.

2. I wrote a letter - நான் ஒரு கடிதம் எழுதினேன்
இங்கு wrote = did + write. எனவே I did write a letter என்றும் எழுதலாம்.
எனவே கேள்வி Did I write a letter - நான் ஒரு கடிதம் எழுதினேனா?
எதிர்மறை I did not write a letter - நான் ஒரு கடிதம் எழுதவில்லை.

3. She reads a book - அவள் ஒரு புத்தகம் வாசிக்கிறாள்
இங்கு reads = does + read. எனவே She does read a book என்றும் எழுதலாம்.
எனவே கேள்வி Does she read a book - அவள் ஒரு புத்தகம் வாசிக்கிறாளா?
எதிர்மறை She does not read a book - அவள் ஒரு புத்தகம் வாசிக்கவில்லை.

4. He does not smoke - அவன் புகைப்பிடிப்பதில்லை
இங்கு Does + Smoke = Smokes.
எனவே He does smoke - அவன் புகைப்பிடிக்கிறான்
எதிர்மறை வசனம் He does not smoke - அவன் புகைப்பிடிக்கவில்லை.

5. Did you clean the room? - நீ அந்த அறையை துப்பரவு செய்தாயா?
இங்கு did + clean = cleaned. எனவே
எனவே வசனம் You cleaned the room - நீ அந்த அறையை துப்பரவு செய்தாய்
எதிர்மறை You did not clean the room - நீ அந்த அறையை துப்பரவு செய்யவில்லை

6. She ran to school - அவள் பாடசாலைக்கு ஓடினாள்
இங்கு ran = did + run. எனவே She did run to school என்றும் எழுதலாம்.
எனவே கேள்வி Did she run to school - அவள் பாடசாலைக்கு ஓடினாளா?
எதிர்மறை வசனம் She did not run to school - அவள் பாடசாலைக்கு ஓடவில்லை.

7. We went to the shop - நாங்கள் கடைக்கு போனோம்
இங்கு went = did + go. எனவே We did go to the shop என்றும் எழுதலாம்.
எனவே கேள்வி Did we go to the shop - நாங்கள் கடைக்கு போனோமா?
எதிர்மறை வசனம் We did not go to the shop - நாங்கள் கடைக்கு போகவில்லை.

8. He bought a new car - அவன் ஒரு புதுக்கார் வாங்கினான்
இங்கு bought = did + buy. எனவே He did buy a new car என்றும் எழுதலாம்.
எனவே கேள்வி Did he buy a new car - அவன் ஒரு புதுக்கார் வாங்கினானா?
எதிர்மறை வசனம் He did not buy a new car - அவன் ஒரு புதுக்கார் வாங்கவில்லை

9. Do you live in London? - நீ லண்டனில் வசிக்கிறாயா?
இங்கு do + live = live. எனவே You live in London? - நீ லண்டனில் வசிக்கிறாய்
எதிர்மறை வசனம் You do not live in London? - நீ லண்டனில் வசிக்கவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. She speaks English - அவள் ஆங்கிலம் கதைக்கிறாள், இங்கு speaks = does + speak. எனவே She does speak English என்றும் எழுதலாம்.
எனவே கேள்வி Does she speak English - அவள் ஆங்கிலம் கதைக்கிறாளா?
எதிர்மறை She does not speak English - அவள் ஆங்கிலம் கதைக்கவில்லை.

11. They came to house - அவர்கள் வீட்டுக்கு வந்தார்கள், இங்கு came = did + come. எனவே They did come to house என்றும் எழுதலாம்.
எனவே கேள்வி Did they come to house - அவர்கள் வீட்டுக்கு வந்தார்களா?
எதிர்மறை They did not come to house - அவர்கள் வீட்டுக்கு வரவில்லை.

12. They don't eat fish - அவர்கள் மீன் சாப்பிடுவதில்லை
இங்கு do + eat = eat. எனவே
எனவே வசனம் They eat fish - அவர்கள் மீன் சாப்பிடுகிறார்கள்
கேள்வி Do they eat fish - அவர்கள் மீன் சாப்பிடுகிறார்களா?

13. Do you play tennis? - நீ ரென்னிஸ் விளையாடுகிறாயா?
இங்கு do + play = play. எனவே
வசனம் You play tennis? - நீ ரென்னிஸ் விளையாடுகிறாய்
எதிர்மறை You do not play tennis? - நீ ரென்னிஸ் விளையாடவில்லை.

14. She opened the window. - அவள் ஜன்னலை திறந்தாள், இங்கு opened = did + open. எனவே She did open the window என்றும் எழுதலாம்.
எனவே கேள்வி Did she open the window. - அவள் ஜன்னலை திறந்தாளா?
எதிர்மறை She did not open the window. - அவள் ஜன்னலை திறக்கவில்லை.

15. I slept well - நான் நன்கு துயின்றேன்
இங்கு slept = did + sleep. எனவே இதனை I did sleep well என்றும் எழுதலாம்.
எனவே கேள்வி Did I sleep well - நான் நன்றாக துயின்றேனா?
எதிர்மறை I did not sleep well - நான் நன்கு துயிலவில்லை.

16. He didn't run fast - அவன் வேகமாக ஓடவில்லை
இங்கு did + run = ran. எனவே
வசனம் He ran fast - அவன் வேகமாக ஓடினான்
கேள்வி Did he run fast - அவன் வேகமாக ஓடினானா?

17. He didn't give me - அவன் எனக்கு தரவில்லை
இங்கு did + give = gave. எனவே
எனவே வசனம் He gave me - அவன் எனக்கு தந்தான்
எதிர்மறை வசனம் Did he give me - அவன் எனக்கு தந்தானா?

18. Where do you eat ? - நீ எங்கே சாப்பிடுகிறாய்?
இங்கு do + eat = eat. எனவே
எனவே வசனம் you eat - நீ சாப்பிடுகிறாய
எதிர்மறை you do not eat - நீ சாப்பிடவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி 2

கீழே உள்ள ஆங்கில வசனங்களை தமிழில் எழுதுக

1. Is there anything to eat?
2. It is all because of you.
3. I know how to speak English.
4. I think it is going to rain
5. I will be ready in a minute.
6. I have got a little money.
7. Thanks for your invitation.
8. She was here with her friends.
9. The house is really beautiful.
10. There was a holiday yesterday.
11. We are going to UK in January.
12. I decided not to go to London.
13. I would love to go with you.
14. There are many fruit trees.
15. I want to open an account.
16. You should not allow this.
17. They do not have enough food.
18. How far is the hotel from here?
19. How much sugar would you like?
20. I will be in Trinco next week.
21. It is only a ten-minutes walk.
22. This house is very expensive.
23. I went to Jaffna and returned.
24. Write this on the black board.
25. What are you worried about?
26. You should tell the truth.
27. Can't you reduce the price?
28. It takes only 15 minutes.
29. How long have you been here?
30. I don't have a spare pencil.
31. It is easy to speak English
32. Peter left five minutes ago.
33. He didn't work very quickly.
34. He has recovered from fever.
35. This book is very popular
36. I will never forget this.
37. They have not met him yet.
38. What are you looking for?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. What is your program now?
40. What do you think of my dress?
41. What kind of food do you like?
42. She is still waiting for you
43. That is what you always say.
44. There is a pen on the table.
45. Have you bought the ticket?
46. He walked towards the car.

## பயிற்சி 3

கீழே உள்ள ஆங்கில வசனங்களை தமிழில் எழுதுக

1. நீங்கள் ஒரு அகராதி வைத்திருக்கிறீர்களா?
2. எனக்கு ஒரு பேனாவும் ஒரு பென்சிலும் தா
3. நான் பாடசாலைக்கு போகவேண்டி இருக்கிறது
4. நான் பாடசாலைக்கு போவது வழக்கம்
5. நாங்கள் அவளை இன்று பார்க்கவில்லை
6. நாங்கள் அவனை மூன்று நாட்களுக்கு முன் பார்த்தோம்
7. நீங்கள் அங்கே எங்கே தங்குவீர்கள்?
8. நான் ஒரு அலுவலகத்தில் வேலை செய்கிறேன்
9. உங்களுக்கு சகோதரர்கள் இருக்கிறார்களா?
10. அவன் 1976 இல் இந்தியாவில் வசித்தான்
11. நான் ஏராளமான நண்பர்கள் வைத்திருக்கிறேன்
12. நீங்கள் இன்று ஏன் மிகவும் தாமதம்?
13. உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?
14. நாங்கள் போனமாதம் ஒரு கார் வாங்கினோம்
15. நான் பல உயரமான கட்டடங்களை பார்த்தேன்
16. உங்கள் உடை என்ன நிறம்?
17. நீங்கள் நேற்று என்ன வாங்கினீர்கள்?
18. நீங்கள் காலை உணவு எடுத்துவிட்டீர்களா?
19. நீங்கள் வேலையை முடித்துவிட்டீர்களா?
20. அவர்கள் வீதியை திருத்திக்கொண்டு இருக்கிறார்கள்
21. அவர்கள் இதை மிகவும் விரும்புவார்கள்
22. என்னுடைய சகோதரனுக்கு 20 வயது
23. நீ நாளைக்கு யாழ்ப்பாணம் போவாயா?
24. நீ நேற்று வேலைக்கு வந்தாயா?
25. நீ நேற்றிரவு எங்காவது சென்றாயா?
26. அவன் அவளுக்கு கொஞ்சம் பணம் கொடுக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பயிற்சி 3**

உதாரணங்கள்

| | |
|---|---|
| 1. English is easy to learn. | ஆங்கிலம் கற்பதற்கு மிகவும் இலகுவானது |
| I can speak English | நான் ஆங்கிலம் கதைக்க முடியும் |
| 2. I do not believe you. | நான் உன்னை நம்பவில்லை |
| You can't eat two breads | நீ இரண்டு பாண் சாப்பிட முடியாது |
| 3. I walked with him. | நான் அவனுடன் நடந்தேன் |
| It took ten minutes | அது பத்து நிமிடங்கள் எடுத்தது |
| 4. What should you do? | நீ என்ன செய்ய வேண்டும் |
| I should learn English | நான் ஆங்கிலம் கற்க வேண்டும் |
| 5. You must believe it. | நீ இதை நம்ப வேண்டும் |
| It is true | இது உண்மை |

மேலே தரப்பட்ட உதாரணங்களை போன்று கீழே உள்ள ஒவ்வொரு ஆங்கில வசனங்களையும் அவற்றின் தமிழ் அர்த்தங்களையும் எழுதி அதன் கீழே அந்த வசனங்களோடு தொடர்புடைய உங்கள் சொந்த ஆங்கில வசனம் ஒவ்வொன்று எழுதி அவற்றின் தமிழ் அர்த்தத்தையும எழுதுக. (60 வசனங்களுமே தவறாக எழுதினாலும் பரவாயில்லை, முயற்சியுங்கள், முயற்சித்தால் மட்டுமே 24 பாட முடிவில் எதையும் மிகச்சரியாக எழுத முடியும்)

| | | |
|---|---|---|
| 1. | You have made a mistake. | நீ ஒரு தவறு செய்து இருக்கிறாய் |
| 2. | I have found the book. | நான் அந்த புத்தகத்தை கண்டு விட்டேன் |
| 3. | He sent me telegram. | அவன் எனக்கு ஒரு தந்தி அனுப்பினான் |
| 4. | Give me the book | எனக்கு அந்த புத்தகத்தை தா |
| 5. | He may be at home. | அவன் வீட்டில் இருக்கலாம் |
| 6. | You must hurry. | நீ விரைய வேண்டும் |
| 7. | We must work | நாங்கள் வேலைசெய்ய வேண்டும் |
| 8. | There is nothing in it. | இதில் உள்ளே ஒன்றும் இல்லை |
| 9. | He wrote to me. | அவன் எனக்கு எழுதினான் |
| 10. | He is too poor. | அவன் மிகவும் ஏழை |
| 11. | He stayed at home. | அவன் வீட்டில் தங்கினான் |
| 12. | I spoke to his brother. | நான் அவனுடைய நண்பனுடன் கதைத்தேன் |
| 13. | He had received the letter. | அவன் அந்த கடிதத்தை பெற்றிருந்தான் |
| 14. | We must obey. | நாங்கள் கீழ்ப்படிய வேண்டும் |
| 15. | You have finished work. | நீங்கள் வேலையை முடித்து இருக்கிறீர்கள் |
| 16. | He is very strong. | அவன் மிகவும் தைரியசாலி |
| 17. | He will speak the truth. | அவன் உண்மை பேசுவான் |
| 18. | He was calling me. | அவன் என்னை கூப்பிட்டுக்கொண்டு இருந்தான் |
| 19. | The dog bit the man. | அந்த நாய் அவனை கடித்தது |
| 20. | I found many errors in it. | நான் அதில் பல தவறை கண்டேன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 21. She did not speak. | அவள் கதைக்கவில்லை |
| 22. He had no money. | அவனிடன் பணம் எதுவும் இருக்கவில்லை |
| 23. His friend arrived. | அவனுடைய நண்பன் வந்தான் |
| 24. She did not move. | அவள் நகரவில்லை |
| 25. He answered me. | அவன் எனக்கு பதில் சொன்னான் |
| 26. The train is late. | அந்த புகையிரதம் தாமதமாய் இருக்கிறது |
| 27. He spent his money. | அவன் தன் பணத்தை செலவு செய்தான் |
| 28. I met him only once. | நான் அவனை ஒருமுறைதான் சந்தித்தேன் |
| 29. He solved the problem. | அவன் அந்த பிரச்சினையை தீர்த்தான் |
| 30. The man was innocent. | அந்த மனிதன் அப்பாவியாய் இருந்தான் |
| 31. He opened his letter | அவன் அவனுடைய கடிதத்தை திறந்தான் |
| 32. The wind was cold. | காற்று மிகவும் குளிராக இருந்தது |
| 33. I will take an umbrella. | நான் ஒரு குடை எடுப்பேன் |
| 34. Every boy should play. | ஒவ்வொரு பையனும் விளையாட வேண்டும் |
| 35. We can travel by water. | நாங்கள் நீரில் பயணிக்க முடியும் |
| 36. I should have spoken | நான் கதைத்து இருக்க வேண்டும் |
| 37. I lost my way. | நான் என்னுடைய பாதையை தொலைத்தேன் |
| 38. I will not forget that. | நான் அதை மறக்க மாட்டேன் |
| 39. I waited for my friend. | நான் என்னுடைய நண்பனுக்காக காத்தேன் |
| 40. He was not there. | அவன் அங்கே இருக்கவில்லை |
| 41. He finished first. | அவன் முதலில் முடித்தான் |
| 42. I cannot help you. | நான் உனக்கு உதவ முடியாது |
| 43. I must know all the facts. | எனக்கு எல்லா உண்மையும் தெரிய வேண்டும் |
| 44. Do you know the time? | உங்களுக்கு நேரம் தெரியுமா? |
| 45. He will waste his time. | அவன் தன்னுடைய நேரத்தை வீணாக்குவான் |
| 46. He said something | அவன் ஏதோ சொன்னான் |
| 47. Can you tell me that? | நீங்கள் எனக்கு அதை சொல்ல முடியுமா? |
| 48. Do you deny it? | நீங்கள் இதனை மறுக்கிறீர்களா? |
| 49. I want to know the reason. | நான் அந்த காரணத்தை அறிய விரும்புகிறேன் |
| 50. I will show the method. | நான் அந்த முறையை காட்டுவேன் |
| 51. He will arrive now. | அவன் இப்போது வந்தடைவான் |
| 52. Please ask him to wait. | தயவுசெய்து அவரை காத்திருக்க கேளுங்கள் |
| 53. I could not sleep. | நான் நித்திரைசெய்ய முடியவில்லை |
| 54. I will trust him. | நான் அவனை நம்புவேன் |
| 55. He came to my house. | அவன் என்னுடைய வீட்டுக்கு வந்தான் |
| 56. He cannot walk. | அவனால் நடக்க முடியாது |
| 57. He has eaten two breads. | அவன் இரண்டு பாண் சாப்பிட்டு இருக்கிறான் |
| 58. Give me soap. | எனக்கு சவர்க்காரம் தாருங்கள் |
| 59. Where do you live? | நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள் |
| 60. I know address. | நான் முகவரியை தெமுமு)ரிந்திருக்கிறேன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Psalm Institute of Engineering and Technology**
A Division of Psalms Technologies (Pvt) Ltd,
22-1/4, Galle Road, Dehiwala.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org